# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.14/2025** |
| Deposition of witness | : | P.W.4 |
| Name | : | முத்துலெட்சுமி |
| Father's /Husband Name | : | நாகராஜன் |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 54 |
| Occupation | : | வீட்டுக்குடித்தனம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 15th day of July 2025.
A1 present. A3, A4 absent. Petition under section 355 BNSS filed. Allowed. A2 died.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருவாரூர் சமத்துவபுரம் முத்துவீதியில் வசித்து வருகிறேன். அ.சா.1 அபிராமி என்னுடைய இரண்டாவது மகள். அ.சா.2 காயத்ரி எனது மூத்த மகள். அ.சா.3 எனது மூத்த மகள் காயத்ரியின் கணவர். ஆஜர் 1வது எதிரி எனது இரண்டாவது மகள் அபிராமியின் கணவர். 2 வது எதிரி கிருஷ்ணமூர்த்தி என்பவர் 1வது எதிரியின் தகப்பனார். அவர் தற்போது இறந்து விட்டார். 3 வது எதிரி 1வது எதிரியின் தாயார். 4 வது எதிரி 1வது எதிரியின் சகோதரி. எனது மகள் அபிராமியை கடந்த 04.09.2014 ல் 1வது எதிரி விஸ்வநாதனுக்கு பட்டுக்கோட்டை வாசவி கல்யாணமஹாலில் வைத்து திருமணம் செய்து கொடுத்தேன். திருமணத்தின் போது எங்களால் முடிந்ததை 1வது எதிரிக்கு செய்து திருமணத்தை நல்ல முறையில் செய்து வைத்தோம். திருமணத்திற்கு பிறகு விஷ்ணுபுரத்தில் எனது மகள் அ.சா.1ம் 1வது எதிரியும் குடும்பம் நடத்தினார்கள். எனது மகள் அபிராமிக்கும் 1வது எதிரிக்கும் திருமணத்தின் பயனாக முதலில் ஒரு பெண் குழந்தை 2015 ல் பிறந்தார். அதிலிருந்து 3 ஆண்டுகள் கழித்து ஒரு ஆண் குழந்தை 2019 ல் பிறந்தார். எனது மகளை திருமணத்திற்கு பிறகு எதிரி வீட்டார் எனது வீட்டிற்கு அனுப்பாமலேயே அங்கேயே

வைத்திருந்தார்கள். அதுபோல எனது உறவினர்கள் யாரையும் எதிரிகள் வீட்டிற்கு ஏதாவது சீர்செய்வதற்காக சென்றாலும் எனது மகள் அ.சா.1ஐ பார்ப்பதற்கு சென்றாலும் எனது மகளை பார்க்கவிடாமலும் எனது மகளை கொல்லைப்புறத்தில் இருக்க வைத்தும் பார்க்க சென்ற எங்களை அசிங்கமான வார்த்தைகளால் திட்டுவார்கள். எதிரிகள் அனைவரும் என்னை பார்த்து முண்டச்சி என்று அசிங்கமாக திட்டுவார்கள். அவ்வாறு எதிரிகள் திட்டியதால் எனக்கு மனஉளைச்சல் ஏற்பட்டது. எனது மகளுக்கு கொடுக்க வேண்டிய சாப்பாடு எதுவும் கொடுக்காமல் 1வது எதிரி கல்லாலும், இரும்பு கரண்டியாலும் தாக்கியதால் எனது மகளுக்கு தலையில் காயம் ஏற்பட்டது. தென்னை மட்டையால் எனது மகளை 1வது எதிரி காலில் ஓட விட்டு தாக்கி உள்ளார். எனது மகள் தூங்குகின்ற போதும் எனது மகள் மார்பின் மீது ஏறி 1வது எதிரி மிதித்துள்ளார். 4வது எதிரி எனது மகளை துணியில்லாமல் நிறுத்தி மிகுந்த கொடுமை படுத்தியுள்ளார். 2வது எதிரி கிருஷ்ணமூர்த்தி எனது மகளை பார்த்து முண்டச்சி பெத்த மகளே என்று சொல்லி தோசைக்கரண்டியால் எனது மகளின் கையில் அடித்து காயத்தை ஏற்படுத்தி இருந்தார். எனது மகளை அதிகமான வேலை பார்க்க சொல்லி 3 வது எதிரி வசந்தா வாளியால் எனது மகளின் தலையில் அடித்தும் காயத்தை ஏற்படுத்தி இருந்தார். எனது மகளுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு எந்த மருத்துவமனைக்கு அழைத்து செல்லாமல் மஞ்சள்பொடியை காயத்தில் வைத்து வீட்டிலேயே அடைத்து வைத்திருந்தார்கள். எனது மகளை 1வது எதிரி கையில் அணிந்திருந்த வளையல்களை உடைத்து செத்துப்போ என்று கொடுமை படுத்தியுள்ளார். எதிரிகள் எனது மகளை கொடுமைப்படுத்தியதால் எனது மகள் மிகவும் மனநிலை பாதிக்கப்பட்டு மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகி ஒரு நோயாளியை போல இருந்தார். அவர் தன்னுடைய வேலைகள் எதையும் செய்து கொள்ள முடியாத அளவிற்கு மிகவும் தொந்தரவு செய்யப்பட்டு மனவேதனையில் இருந்தார். எனது மகள் மிகவும் உடல் நிலை பாதிக்கப்பட்டு இருப்பதாக வெங்கடேசன் என்பவர் மூலம் 1வது எதிரி குடும்பத்தார் கொடுத்த தகவலின் பேரில் நானும் எனது உறவினரும்

அங்கு சென்று பார்த்த போது எனது மகள் மிகவும் மோசமான உடல் நிலையில் இருந்தார். அவரை உடனடியாக அங்கிருந்து அழைத்துக்கொண்டு மருத்துவமனைக்கு கொண்டு போனோம். இது சம்மந்தமாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி நன்னிலம் காவல் நிலையத்தில் எனது மகள் அபிராமி புகார் அளித்தார். எனது மகள் கொடுத்த புகாரில் போலீசார் என்னை சாட்சியாக விசாரித்தார்கள். அ.சா.1 அபிராமி தற்போது என்னுடன் தான் வசித்து வருகிறார். எனது மகள் அபிராமி என்னுடைய பராமரிப்பிலும் எனது மூத்த மகள் காயத்ரி கொடுக்கும் பணத்தில் வைத்து பராமரித்து வருகிறேன். இதுநாள் வரை எனது மகளை எதிரி குடும்பத்தார் வந்து பார்க்கவும் இல்லை எந்த உதவியும் செய்யவும் இல்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

எனது மகள் அபிராமியை விஷ்ணுபுரத்தில் இருந்து நான் தான் அழைத்து வந்தேன் என்றால் சரிதான். 2 வது எதிரி கிருஷ்ணமூர்த்தியிடம் எனது மகளை மருத்துவரிடம் அழைத்து சென்று காட்டிவிட்டு கொண்டு வந்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டு அழைத்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது மகளை அழைத்து வந்தேன் என்றால் சரிதான். எனது பேரக்குழந்தைகள் மதுமிதா மற்றும் துரைசாமி. நான் எனது மகளை அழைத்து வந்த சமயத்தில் மதுமிதாவிற்கு எத்தனை வயது என்றால் 6 வயது மற்றும் துரைசாமிக்கு 1 வயது. நான் எனது மகளை திருப்பி அழைத்துக்கொண்டு அவரது கணவர் வீட்டில் சென்றேனா என்றால் இல்லை. எனது மகளின் மாமியார் எனது மகள் இறந்துவிட்டதாக சொல்லி பிள்ளைகளை வளர்த்து கொள்கிறோம் என்று சொன்னதால் நான் அழைத்து செல்லவில்லை. அவ்வாறு நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மகளை திருமணம் செய்து கொடுக்கும் போது மாப்பிள்ளை வீடு விசாரித்து தான் திருமணம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரிகளின் குடும்பத்தை பற்றி திருமணத்திற்கு முன்பு தவறான தகவல் எதுவும் வந்ததா என்றால் இல்லை. திருமணத்திற்கு பின்பு தான் ஏன் இந்த குடும்பத்தில் பெண்ணை கொடுத்தீர்கள்

என்று ஊரே சொன்னது. நான் தான் எனது மகள் தனது கணவரிடமிருந்து பிரிந்து வாழ்வதற்கு காரணம் என்றால் சரியல்ல. திருவாரூர் கூடுதல் மகிளா நீதிமன்றதத்தில் DVC.35/2022 என்ற வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் 1 வது எதிரி ஆஜராகி வருகிறார் என்றால் சரிதான். அந்த வழக்கின் வாய்தா நாள் என்ன என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் 1 வது எதிரி எனது மகளை சந்தோசமாகத்தான் வைத்திருந்தார் என்றாலும் இந்த வழக்கில் எப்படியாவது 1வது எதிரிக்கு தண்டனை வாங்கி தர வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் எனது மகளை உடல் ரீதியாகவோ , மன ரீதியாகவோ எந்த கொடுமையும் செய்யவில்லை என்றாலும், சில சில விஷயங்களை மன்னித்து 1வது எதிரியுடன் எனது மகளை வாழ வைத்திருக்கலாம் என்றாலும் சரியல்ல. மேற்படி DVC.35/2022 என்ற வழக்கினை 1 வது எதிரியிடம் பணம் பரிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் சொத்து பத்து உள்ள குடும்பம் என்றால் சரிதான். நாங்கள் நடுத்தர குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்று தெரிந்து தான் பெண் எடுத்தார்கள் என்றால் சரிதான். இரண்டு குழந்தையின் எதிர்காலத்தை நலன் கருதியாதி எனது மகளை 1வது எதிரி வீட்டில் விட்டிருக்கலாம் என்றால் சரியல்ல. எனது மகளை 1வது எதிரி சந்தோசமாகத்தான் வைத்திருந்தார் என்றாலும் இப்பொழுதும் எனது மகளுடன் 1வது எதிரி அழைத்து குடும்பம் நடத்த தயாராக உள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.07.15 17:12:30 +05'30'

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`